பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
21 02 2025 6 45
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, அதாவது தலைமைத்துவ மாநாட்டை புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

2. கடல்சார் மேம்பாட்டில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

3. ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை வரும் 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும் என்ற நோக்குடன் மாநில அரசு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

4. பள்ளிக் கல்வித்துறைக்கு கடந்த 4 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்பட்டது குறித்து அத்துறைக்கான அமைச்சர் விளக்கமளிக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

5. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, முதலாவது தலைமைத்துவ மாநாட்டைப் புதுதில்லியில் இன்று தொடங்கி வைத்து உரையாற்றுகிறார்.

காலை 11 மணிக்குத் தொடங்கும் இம்மாநாட்டில் பூடான் பிரதமர் திரு தாஷோ ஷெரிங் டோப்கே சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் அரசியல், விளையாட்டு, கலை, ஊடகம், பொது நிர்வாகம், வர்த்தகம், சமூகநலன் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்.

ஒத்துழைப்பு, தலைமைத்துவ சிந்தனை, போன்ற அம்சங்கள் இந்த மாநாட்டின் கருப்பொருள்களாக அமைந்துள்ளன.

குஜராத்தில் அமைக்கப்படவுள்ள தலைமைத்துவ பயிற்சி பள்ளியின் சார்பில் இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

<<<<<>>>>>

கடல் சார் மேம்பாடட்டில் உலக அளவில் இந்தியா முன்னணியில் உள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற பசுமைக் கப்பல் போக்குவரத்து தொடர்பான மாநாட்டில் பேசிய அவர், நிலைத்தன்மை, புதிய கண்டுபிடிப்புகள், சுற்றுச் சூழல் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்படுவதாகக் கூறினார்.

பசுமை துறைமுகங்களுக்கான வழிகாட்டுதல்கள், தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்கம் போன்ற முன்முயற்சிகள் மூலம் துறைமுகங்களில் அதற்கான செயல்பாடுகள் அதிகரிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அண்மையில் அறிவிக்கப்படட் 25 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டிலான கடல்சார் மேம்பாட்டு நிதியத்தின் மூலம் உள்கட்டமைப்பு மேம்படுத்தப்படும் என்றும், இதன்மூலம் முதலீடுகள் அதிகரிக்கும் என்றும் திரு சர்பானந்த சோனாவால் கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய கப்பல் துறை இணையமைச்சர் திரு சாந்தனு தாக்கூர், இத்துறையில் பசுமை எரிசக்தி, புதுமையான கப்பல் கட்டும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் மூலம் உலகுக்கு இந்தியா வழிகாட்டியாகத் திகழ்கிறது என்றார்.

<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சி குறித்த சிந்தனை மற்றும் சேவை மனப்பான்மையுடன்இளைஞர்கள் செயல்பட வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு ஆர்.என் ரவி வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் சுவாமி விவேகானந்தர் குறித்த இரண்டு நாள் தேசிய கருத்தரங்கை நேற்று தொடங்கி வைத்துப் பேசிய அவர், சுவாமி விவேகானந்தரின் தொலைநோக்குப் பார்வையுடன் தேசம் முன்னேறி வருவதாக கூறினார்.

மக்கள் நலனை மையமாகக் கொண்ட மத்திய அரசின் திட்டங்கள் அனைவரையும் சென்றடைவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் சுவாமி விவேகானந்தரின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் திரு ஆர்.என்.ரவி கூறினார்.

<<<<<>>>>>

ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கை வரும் 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டும் என்ற நோக்குடன் மாநில அரசு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் குறித்தும், அதற்கான நிதி ஆதாரங்கள் குறித்தும் பொருளாதார வல்லுநர்களுடன் ஆலோசித்ததாக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்றரை ஆண்டுகளில் மாநில அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக அதிக முதலீடுகள் ஈர்க்கப்பட்டு 40 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாகவும் திரு. மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள காலிப் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு சிவசங்கர் கூறியுள்ளார்.

பெரம்பலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போக்குவரத்து கழகங்களுக்கு தொடர்ந்து புதிய பேருந்துகள் வாங்கப்படுவதாகத் தெரிவித்தார்.

<<<<<>>>>>

பள்ளிக் கல்வித்துறைக்கு கடந்த 4 ஆண்டுகளில் ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்பட்டது குறித்து அத்துறைக்கான அமைச்சர் விளக்கமளிக்க வேண்டும் என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கடந்த 4 ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறைக்கு ஒன்றரை லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதாகவும், ஆனால் பல்வேறு இடங்களில் அரசுப் பள்ளி மாணவர்கள் வகுப்பறைக் கட்டிடம் இன்றி மரத்தடி நிழலில் கல்வி பயின்று வருவதாகவும் கூறியுள்ளார்.

எனவே இதுகுறித்து பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி விளக்கமளிக்க வேண்டும் என்றும் திரு. அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்களும், போதைப்பொருள் புழக்கமும் அதிகரித்துள்ளதாக அவர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறிய திமுக அரசு நல்லாட்சி வழங்குவதில் தோல்வியடைந்துவிட்டதாகவும் திரு. அண்ணாமலை கூறியுள்ளார்.

<<<<<>>>>>

அஞ்சல் துறையின் சார்பில் விபத்துக் காப்பீட்டுத் திட்டம், சேலம் மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படடுத்தப்படுகிறது.

இத்திட்டத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று சேலம் அஞ்சல் கோட்ட உதவி கண்காணிப்பாளர் திரு பரமேஸ்வரன் எமது செய்தியாளரிடம் கூறினார்.

<<<<<>>>>>

மாணவர்களிடையே போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுப்பதில் ஆசிரியர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று தருமபுரி மாவட்ட ஆட்சியர் திரு சதீஷ் வலியுறுத்தியுள்ளார்.

போதையில்லா தமிழகம் குறித்த கைப்பேசி செயலி அறிமுக கூட்டத்தில் பேசிய அவர், போதைப் பொருட்களின் தீமைகள் குறித்து ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>

*இருவரிச் செய்திகள்*

பிரான்ஸ் அதிபர் திரு இம்மானுவேல் மேக்ரான், உக்ரைன் விவகாரம் மற்றும் வரிவிதிப்பு நடைமுறைகள் குறித்து அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் டிரம்புடன் விரைவில் பேச்சு நடத்த உள்ளதாக பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

நாட்டில் கடந்த ரபி பருவத்தில் ஆயிரத்து 132 லட்சம் மெட்ரிக் டன் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டதாக மத்திய உணவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

பிரதமரின் தொழில் பழகுநர் திட்டத்திற்கான இரண்டாவது சுற்று தொடங்கியுள்ள நிலையில், இதில் பயன் பெற தகுதியான இளைஞர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம் என்று கம்பெனி விவகாரங்கள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

உத்தரப்பிரதேச மாநிலம் கோரக்பூர் ஆகாஷ்வாணி நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து, தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் திரு எல். முருகன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<>>>>>

இரண்டு நாள் சர்வதேச தோல் பொருள் கண்காட்சி, புதுதில்லியில் நேற்று தொடங்கியது.

<<<<<>>>>>

ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்பாட்டைத் தவிர்ப்பது குறித்து விழிப்புணர்வு மாரத்தான் சென்னையில் நாளை நடைபெற உள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா 6 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்றது.

நேற்று துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த பங்களாதேஷ் அணி, 49 புள்ளி 4 ஓவரிலேயே 228 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இதையடுத்து 229 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 46 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 231 ரன் எடுத்து வெற்றி பெற்றது.

அதிகபட்சமாக ஷுப்மன் கில் 101 ரன் எடுத்தார்.

<<<<<>>>>>

புனே சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய்சுந்தர் பிரசாந்த் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-3, 2-6, 12-10 என்ற செட் கணக்கில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சாகேத் மைனேனி இணையை வென்றது.

<<<<<>>>>>